**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | Crl.M.P.No.421/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | ம.சா.1 |
| Name : | திருமதி.சுமித்ரா |
| Husband Name : | திரு.வரதராஜன் |
| Village : | ஆய்குடி |
| Taluk : | குன்னம் |
| Age : | 29 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 23.07.2025

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

(மனுதாரர் ஆஜர்).

<u>**சத்தியபிரமாண வாக்குமூலம்**</u>

**1).** நான் இவ்வழக்கின் மனுதாரர் ஆவனே். எனக்கு ஆதரவாக DVC.No.31/2023 இந்நீதிமன்றத்தில் கடந்த 21.03.2024 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அவ்வுத்தரவின்படி எதிரிமனுதாரர்கள் செயல்படவில்லை. கடந்த 27.03.2024, 10.04.2024 மற்றும் 20.04.2024 ஆகிய தேதிகளில் தலைவாய் காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் நானும் எனது பெற்றோரும், பாதுகாப்பு அலுவலரும் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு திருமண சீதன நகை மற்றும் சீதனப்பொருட்கள் நீதிமன்ற உத்தரவின்படி திரும்பபெறுவதற்காக சென்றோம். அங்கு எதிர்மனுதாரரும், அவரது பொற்றோரும் தனது சீதன நகை மற்றும் சீதனபொருட்களை கொடுக்காமல் அலைகழித்தனர். அங்கு எதிர்மனுதாரரும் எதிர்மனுதாரரின் பெற்றோரும் வேண்டுமென்றே பல பொய்யான காரணங்களை கூறி நேரடியாகவே பொருட்களை கொடுக்காமலும், நீதிமன்ற உத்தரவை மதிக்காமல் இருந்தனர். அதன்பின்பு நானும், எனது பெற்றோரும், பாதுகாப்பு அலுவலரும், தலைவாய் காவல் நிலைய ஆய்வாளரும்

சமூக நீதிமன்றத்தில்  எதிர்மனுதாரர் மீது நீதிமன்ற உத்தரவுப்படி எனது சீதன நகைப்பொருட்களை எடுக்கவிடாமல் அலைகழித்தது சம்மந்தமாக  புகார் கொடுத்தேன். அது சம்மந்தமாக மாண்புமிகு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் மீது குடும்ப வன்முறைச்சட்டம் பிரிவு 31–ன் படி தண்டனை வழங்கியும் எதிர்மனுதாரர் நீதிமன்ற உத்தரவுபடி என் சீதன பொருட்களை திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டபடி திருப்பி கொடுக்க சமூக நீதிமன்றம் உத்திரவிடவேண்டுகிறேன்.  மேலும், எதிர்மனுதாரர் தரப்பில் இதுநாள் வரை எந்த ஒரு மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை.  எனவே எனது சாட்சியத்தை ஏற்றும்  நான் தாக்கல் செய்துள்ள  DVC.31/2023 உத்தரவு நகல் **ம.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** 2ம் எதிர்மனுதாரர் மணிமேகலை  கடந்த 10.04.2024 அன்று மாவட்ட சமூக நல அலுவலர் அவர்களிடம்  எழுதி கொடுத்த வாக்குமூலம் **ம.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.**  1ம் எதிர்மனுதாரர் வரதராஜன் கடந்த 20.04.2024 அன்று மாவட்ட சமூக நல அலுவலர் அவர்களிடம் எழுதி கொடுத்த வாக்குமூலம் **ம.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** எனவே மனுப்படி தீர்ப்பாக வேண்டுகின்றேன்.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.